DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No:145/2021 Deposition of Witness for : P.W.14**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | கோபி | Calling | மருத்துவர் |
| Father's Name | : | கண்ணையன் | Taluk | |
| Age | : | | District | |
| Village | : | | | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 16-02-2026

முதல் விசாரணை

நான் தற்போது பல்லடம் அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 12.05.2017 ஆம் தேதி பல்லடம் அரசு மருத்துவமனையில் நான் அலுவலில் இருந்தபோது இரவு 11.20 மணியளவில் ராக்கி வயது 24 என்ற நபரை மருத்துவ பரிசோதனைக்காக காங்கேயம் போலீசாரால் அழைத்துவரப்பட்டார். அவரை நான் விசாரித்தபோது 11.5.2017 ஆம் தேதி இரவு 7:30 மணிக்கு கத்தியை கையில் பிடித்த போது தனது இடது கை நடு விரலில் காயம் ஏற்பட்டதாக சொன்னார். அவரை நான் பரிசோதித்தபோது அவரது இடது கை நடு விரலில் 3x0.2 செ.மீ அளவுள்ள வெட்டுக்காயம் ஒன்று காணப்பட்டது. அதற்கு நான் சிகிச்சை அளித்தேன். அது குறித்து நான் விபத்து பதிவேட்டில் பதிவு செய்தேன். **விபத்து பதிவேட்டு அறிக்கை அ.சா.ஆ.11.** என்னிடம் காட்டப்படும் சா.பொ.2 கத்தியை பயன்படுத்தி ஒருவரை தாக்க முயிலும்போது அவர் தடுக்கும் போது நான் விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. இது தொடர்பாக ஆய்வாளர் விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. காங்கயத்தில் அரசு மருத்துவமனை உள்ளது என்று சொன்னால் சரிதான். காங்கேயம் போலீசார் அவசர சிகிச்சைக்காக காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு செல்லலாம் என்று சொன்னால் சரிதான். எதிரி என்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வரும்போது ஏன் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவில்லை என்று காங்கேயம் போலீசாரிடம் கேட்டேனா என்றால் ஒரு நபரை சிகிச்சைக்கு கொண்டு வரும்போது நான் அதுபோல கேட்க முடியாது. காங்கயம் போலீசார் மேற்படி நபரை என்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வந்தபோது அவரை காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு கூட்டிச் செல்லாமல் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு ஏன் கூட்டி வந்தீர்கள் என்று குறிப்பாக கேட்டு அதை பதிவு செய்தேனா என்றால் இல்லை. என்னிடம் அழைத்து வரப்பட்ட நபருக்கு உயிருக்கு ஏதும் பாதிப்பு இல்லை என்று சொன்னால் சரிதான்.

2. நல்லூர் காவல் நிலையத்திற்கும் பல்லடம் அரசு மருத்துவமனைக்கும் எவ்வளவு தொலைவில் இருந்து எனக்கு தெரியாது. நல்லூர் காவல் நிலையத்தில் சரணடைந்த எதிரியை நான் பணிசெய்த மருத்துவமனையில் சிகிச்சைக்காக கொண்டு வந்துள்ளார்கள் என்றாலும் அதனால் தான் அவரை காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லவில்லை என்று சொன்னாலும் சரியல்ல விபத்து பதிவேட்டு அறிக்கையில் மேற்படி காயத்திற்கு ஏற்கனவே காங்கேயம் அரசு மருத்துவமனையில் முதலுதவி செய்யப்பட்டதாக குறிப்பு உள்ளது. மேற்படி சங்கதி காவல்துறை நான் சொன்ன விபரத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி காயம் எப்படி ஏற்பட்டது என்பதை எதிரி சொன்னதின் விபரங்கள் அடிப்படையில் பதிவு செய்தேன் அவரும் காங்கேயம் அரசு மருத்துவமனையில் தனக்கு முதலுதவி செய்யப்பட்டதாக என்னிடம் குறிப்பிட்டார். மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயங்கள் ஒருவர் அவரை தாக்க வரும்போது தடுத்தாலும் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

3. ஏற்கனவே காங்கேயம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் மீண்டும் என்னிடம் சிகிச்சை பெறுவதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. காங்கயம் அரசு மருத்துவமனை விபத்து பதிவேட்டு அறிக்கையை நான் பார்வையிட்டேனா என்றால் இல்லை. ஏற்கனவே மேற்படி காயத்திற்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் அது குறித்து ஆவணங்களை பார்வையிட வேண்டியது மருத்துவரின் கடமை என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணங்களை கேட்டேன் அவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார்கள்

காவல் ஆய்வாளர் மேற்படி விபத்து பதிவேட்டு அறிக்கை பதிவு செய்த பிறகு எவ்வளவு நாட்கள் கழித்து என்னை விசாரித்தார்கள் என்று நினைவில்லை. மேற்படி விபத்து பதிவேட்டு அறிக்கையை காவல் ஆய்வாளரிடம் எப்போது கொடுத்தேன் என்று நினைவில்லை.

4. விபத்து பதிவேட்டு அறிக்கை பதிவு செய்தால் அது குறித்து காயச் சான்றிதழ் வழங்க வேண்டும் என்று சொன்னால் சரிதான். மேற்படி காயம் தொடர்பாக கருத்துரையை நான் ஆய்வாளரிடம் கொடுத்துள்ளேனா என்றால் அது குறித்து ஆவணங்களை பார்வையிட்டால் தான் தெரியும். பொதுவாக விபத்து பதிவேட்டு அறிக்கையின் பின்புறம் காயத்தின் தன்மை குறித்து கருத்துரை வழங்குவது 2017 ஆம் வருடம் வழக்கம் என்று சொன்னால் சரிதான். நான் அது போன்று எந்தவிதமான கருத்துரையும் வழங்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் இந்த வழக்கில் போலீசாருக்கு ஆதரவாக விபத்து பதிவேட்டு அறிக்கையை பதிவு செய்து எதிரியின் சட்ட உரிமையான கருத்துரை வழங்காமல் போலீசருக்கு ஆதரவாக செயல்பட்டு உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.02.16 21:44:17 +0530

3-ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.